செ.வெ.எண்.399 நாள்:11.08.2017

காஞ்சிபுரத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமை தாங்கி பேசியதாவது,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விநாயகர் சிலைகளை கரைப்பதற்கு பொன்னேரி கரை, மதுராந்தகம் ஏரி, செய்யூர் வட்டத்தில் ஆலம்பரைகுப்பம் (கடப்பாக்கம்), வடபட்டிணம்குப்பம், கடலூர் குப்பம், தழுதாலிகுப்பம், பரமன்கேணிகுப்பம், திருக்கழுக்குன்றம் வட்டத்தில் சதுரங்கப்பட்டினம் குப்பம், மாமல்லபுரம் கடற்கரை, திருப்போரூர் வட்டம் கோளவளம் கடற்கரை, சோழிங்கநல்லூர் வட்டத்தில் நீலாங்கரை கடற்கரை, பல்கலைநகர் கடற்கரை ஆகிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும், விநாயகர் சிலைகள் காவல் துறை அனுமதி பெற்றே வைக்கப்பட வேண்டும். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு மட்டுமே, விநாயகர் சிலைகள் வைக்க அனுமதி வழங்கப்படும். புதிய இடங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அனுமதியின்றி விநாயகர் சிலைகள் வைக்கப்படும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். விநாயகர் சிலைகளை களிமண்ணால் தயாரித்து இருக்க வேண்டும். சுடப்படாததும், சிலை மீது இரசாயன வண்ணம் பூசியிருக்க கூடாது. கிழங்குமாவு மற்றும் மரவல்லிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை கழிவுகள் போன்ற சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருட்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைக்க வேண்டும். சிலை கரைக்க நிர்ணயிக்கப்பட்ட தேதியில் அனைத்து சிலைகளும் கரைக்கப்பட வேண்டும். கடற்கரைப் பகுதியில் சிலைகளை கடல் ஓரத்திலிருந்து 500 மீட்டருக்கு அப்பால் படகு மூலம் கொண்டு சென்று கரைக்க வேண்டும். அதற்குமுன் சிலைகளின் மேலுள்ள பூஜை பொருட்கள், அலங்கார பொருட்கள் அகற்றப்படவேண்டும். சிலைகளுக்கு மேல் ஓலைக் கொட்டகை அமைக்ககூடாது. தீப்பற்றக்கூடிய பொருட்களை சிலைக்கு அருகில் பயன்படுத்தக்கூடாது. சிலைகள் வரையறுக்கப்பட்ட உயத்திற்கு மேல் இருக்கக்கூடாது. காவல் துறையினரால் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்திலேயே விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்ல வேண்டும். ஊர்வலத்தில் ஆட்சேபணைக்குரிய மந்திரங்களை வாசித்தல்/கோஷங்கள் போடுதல் கூடாது. ஊர்வலத்தின்போது அசம்பாவித சம்பவத்தில ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

விநாயகர் சிலைகளை பாதுகாக்க 5 நபர்கள் கொண்ட குழு அமைக்க வேண்டும். எவ்வித அசம்பாவிதம் ஏற்பாடத வண்ணம் போதுமான முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சிறுபான்மையினர் வசிக்கும் இடங்களில் விநாயகர் சிலை கரைக்கும் ஊர்வலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மசூதிகளில் தொழுகை நேரத்தில் விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்து செல்ல கூடாது. ஊர்வலத்தில் பட்டாசு வெடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. சிலைகளை கடலில் கரைத்த பிறகு ஊர்வலமாக வந்த மக்கள் கலைந்து போகும்போது சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். சாலையில் மின்கம்பம் அல்லது ஒயரினால் விபத்து ஏற்படாவண்ணம் சிலைகள் கொண்டு செல்லப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சார் ஆட்சியர் திரு.கில்லி சந்திரசேகர், மாவட்ட வன அலுவலர் திரு. ராம்மோகன் மற்றும் காவல்துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.